**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்**

OS.No: 134/2010 நாள். 28.11.2024

பி.வா.சா.2, சீதாராம்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் ராணுவத்தில் 28 வருடங்களாக வேலை பார்த்தேன். தற்போது என் மனைவியுடன் ரெட்டியபட்டியில் குடியிருந்து வருகிறேன் . நீதிமன்றத்திலிருந்து நீதிமன்ற அழைப்பாணை வந்தது. என் அப்பா வேறு ஆவணங்களில் கையொப்பம் போட்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. உயிலில் எழுதப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியாது . எங்கள் ஊரில் சஞ்சீவி நாயக்கர் , வேலுச்சாமி என்ற பெயரில் வேறு நபர்கள் குடியிருக்கிறார்கள் என்றால் சரிதான் . உயிலில் என் அப்பா தான் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார் என்பதை நிரூபிப்பதற்கு அவர் கையொப்பம் போட்ட வேறு ஆவணங்கள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா பெயரில் வேறு நபர் அதே ஊரில் உள்ளார் என்றும் , அவர் தான் இந்த உயிலில் கையொப்பம் போட்டுள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல . என் அப்பா உயிலில் கையொப்பம் போட்டதாக நான் பார்த்ததாக உயிலில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உயிலில் உள்ள கையொப்பம் என் அப்பாவின் கையொப்பம் தான் . நான் பிரதிவாதிக்கு உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

சாட்சியின் கையொப்பம்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு . தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.